8th November 1965]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, போலீஸ் அதிகாரிகளின் சம்பள விகிதங்களை உயர்த்துவது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அதேமாதிரி அவர்கள் "தினப்படியையும்" உயர்த்துவது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : போலீஸ்காரர்களின் சம்பள விகிதத்தை உயர்த்த அரசாங்கம் முடிவு செய்து இருக்கிறது. அதை உயர்த்தும்போது தினப்படியை பற்றியும் கவனிக்கப் படும்.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : போலீஸ்காரர்களின் சம்பள விகிதங்கள் உயர்த்தப்படுவதானது அடுத்த வருஷ ஆரம்பத்திலே அமுல் செய்யப்படுமா என்பதை கனம் அமைச்சர் தெரிவிப்பாரா?

கனம் திரு. பூ. கக்கன் : உடனடியாக நான் சொல்ல முடியாது. கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போட்டால் அதைப்பற்றி சொல்ல முடியும்.

* 347 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தனுஷ்கோடியில் அண்மையில் ஏற்பட்ட புயல் விபத்தினால் பாதிக்கப்பட்ட ரயில்வே போலீசார்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களுக்கு உதவித்தொகை ஏதேனும் வழங்கப் பட்டதா ?

(உ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) முதல் (உ) வரை சபை முன் ஒரு விவர அறிக்கை* வைக்கப்பட்டுள்ளது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்தச் சபை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் ரெயில்வே போலீஸாருக்குக் கொடுக்கப்பட்டுள்ள தொகை—படித்தொகை கொடுக்கப்பட்டது போல்—குறைவாகத் தெரிகிறது. நமது போலீஸ்காரர்களுக்கு உதவித்தொகை அளிப்பது பற்றி "சொந்த உடைமைகளை இழந்த உள்ளூர் போலீஸ்காரர்கள் உட்பட எல்லோருடைய நிலை பற்றியும் இராமநாதபுரம் கலெக்டரைக் கலந்து ஆலோசிக்கும்படியும் நஷ்ட ஈடு வழங்குவதற்காக செயற்குறிப்புகளை அனுப்புமாறும் இராமநாதபுரம் போலீஸ் சூப்பிரண்டுக்கு போலீஸ் துறைத் தலைவர் கட்டளையிட்டுள்ளார்." என்று சபைமுன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. புயல் அடித்து கிட்டத்தட்ட ஒரு ஆண்டு ஆகிறது. இன்னும் பரிசீலனையில் இருக்கிறது என்று கூறினால், மிகவும் காலதாமதம் ஆகக் கூடிய நிலையிலேயே இருக்கிறது. ஆகவே, உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா ? ரயில்வே போலீஸாருக்கு உதவித்தொகை உடனடியாக கொடுக்கப்பட்டது. நமது மாநில போலீஸாருக்குக் கொடுக்கப்படாமல் இருக்கக் காரணம் என்ன?

* 563–565-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

கனம் திரு. பூ. சக்கன் : உடனடியாக என்னென்ன உதவிகள் செய்யவேண்டுமோ அவைகளைச் செய்து விட்டார்கள். பின்னால் கலெக்டர் அவர்கள் பார்த்து விசாரணை செய்து, கலெக்டர் சிபாரிசு ஏற்றுக்கொண்டு அரசாங்கம் முடிவு செய்யலாம் என்று இருக்கிறது. கொடுப்பது என்று சொன்னால் விவரம் இல்லாமல் கொடுக்க முடியாது. எல்லாவற்றையும் பார்த்துத் தான் கொடுக்க முடியும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட போலீஸ்காரர்களுக்கு உதவித்தொகை கொடுக்கப்பட்டதாக அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறதே, இலாகாவிலே பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுப்பதற்காக பெனவலண்ட் ஃபண்ட் இருக்கிறதே, அதிலிருந்து ஏதாவது கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அதிலிருந்தும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கள்ளநோட்டு வழக்குகள்

*348 கேள்வி.—திரு. எம். எஸ். மணி: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963, 1964, 1965-ம் ஆண்டுகளில் தமிழ் நாட்டில் தொடரப்பட்ட கள்ள நோட்டு தயாரிப்பு வழக்குகள் எத்தனை ?

(இ) அவைகளுள், தண்டனையில் முடிந்த, விடுதலையில் முடிந்த வழக்குகள் முறையே எத்தனை ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 1963—2.
1964—3.
1965—1.
(30—6—1965 வரை)

(இ)

	1963	1964	1965
தண்டிக்கப்பெற்றவை	1	3	..
விடுதலை பெற்றது	1	..	..

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், ஒன்றுக்கு இரண்டாகக் கொடுப்பதாகச் சொல்லி ஏமாற்றும் கூட்டம் தமிழ்நாட்டில் பரவியிருப்பதாகத் தெரிகிறது. இதைத் தடுக்க அரசாங்கம் என்ன முயற்சி எடுத்திருக்கிறது என்று அறியலாமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கெல்லாம் இந்த மாதிரிக் குற்றங்கள் காணப்படுகின்றனவோ அவைகளை கவனித்துத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஜில்லா போலீஸ் அதிகாரிகளுக்குக் குறிப்பாக ஐ. ஜி. அவர்கள் தக்க கட்டளை அனுப்பியிருக்கிறார்கள். அதன்படி தான் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த கள்ளநோட்டு தயாரிப்பு வழக்கோடு கள்ள நோட்டு இரட்டிப்பு வழக்குகளும் பெருகி போலீஸ் இலாகாவினரே சில வழக்குகளில் ஈடுபட்டிருக்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS